FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8384150

1 District மாவட்டம் சேலம் PS காவல்நிலையம் அஸ்தம்பட்டி Year ஆண்டு 2026 FIR No முதல் எண் 111/2026 நாள் 21.07.2026

2 (i) Act சட்டம் The Prevention of corruption
(ii) Act சட்டம் Act 1988 as amended in 2018
(iii) Act சட்டம்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும் பிரிவுகளும்

Sections பிரிவுகள் 7(a)
Sections பிரிவுகள்
Sections பிரிவுகள்

3 (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல்
Date to நாள் வரை 10.07.2026 காலை 16.55 மணிக்கு மேல்
Time Period நேர அலகு
Time from நேரம் முதல்
Time to நேரம் வரை 17.07.2026 காலை 13.20 மணி
18.07.2026 காலை 12.55 மணி
21.07.2026 காலை 05.40 மணி

(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.07.2026
Time நேரம் 13.00 மணி

(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் என் 21.07.2026
Time நேரம் 1300 மணி

4 Type of Information Written/ Oral / Electronic form தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு புகார் மனு

5 Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் பற்றி காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
சுமார் 60 கி.மீ. தெற்கு

Beat Number முறைக் காவல் எண்

(b) Address முகவரி மேற்கண்ட மன் வாரிய அலுவலகம், அஸ்தம்பட்டி, சேலம் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station then the Name of P.S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் மாவட்டம்

6 Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் B. ராஜேஷ்

(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் பாலகிருஷ்ணன்

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality நாட்டினம் இந்தியன்

(e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue வழங்கப்பட்ட நாள்

Place of Issue வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் வியாபாரம்

(g) Address முகவரி எண் 5/364, காந்திபுரம் அம்பாபாளையம் (அஞ்சல்), அஸ்தம்பட்டி, சேலம் மாவட்டம்

7 Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பட்டதகுதிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. அய்யாசாமி, உதவி பொறியாளர், மேற்கண்ட மன் வாரிய அலுவலகம், அஸ்தம்பட்டி, சேலம்.

2) திரு. சந்திரன், உள்ளிட்டோர், மேற்கண்ட மன் வாரிய அலுவலகம், அஸ்தம்பட்டி, சேலம்.

8 Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முன்னரே தகவல் கொடுப்பதில் தாமதம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோய்ட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10 Total value of properties stolen / involved :
களவுபோய்ட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

உபரம் தணைதாளில் இணைக்கப்பட்டது

/

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2(s) கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. Tulasi 21/7/2016

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendiran
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court :
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21.07.2016 / 17.40

Name பெயர் N. Narendiran
Rank நிலை ..... No. எண் .....
Inspector of Police,
VAC, Salem

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 21.07.2025-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மதியம் சுமார் 13.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, B லாபேஷ், S/o N பாஸ்கரன், கதவு எண் 5/364, காந்திபுரம், அம்மாபாளையம் (அஞ்சல்), ஆத்தூர், சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் : B. லாபேஷ், S/o N பாஸ்கரன், கதவு எண் 5/364, காந்திபுரம், அம்மாபாளையம் (அஞ்சல்), ஆத்தூர், சேலம் மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம். ஐயா, நான் அம்மாபாளையம் அஞ்சல், காந்திபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமான ஆத்தூர் தாலுகா, அம்மாபாளையம் அஞ்சல், காந்திபுரம் பகுதியில் சுமார் 5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அந்த நிலம் எனது அப்பா திரு. N. பாஸ்கரன் பெயரில் உள்ளது. அந்த நிலத்தின் ஒரு பகுதியில் பழைய வீடு ஒன்று இருந்தது. அதனை இடித்துவிட்டு புதிய வீடு கட்ட முடிவு செய்து, சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய வீடு கட்டும் பணியை ஆரம்பித்தோம். புதிய வீடு கட்டுவதற்காக தற்காலிக மின் இணைப்பு பெற வேண்டியிருந்ததால், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆத்தூர் தாலுக்கா, மஞ்சினி மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று உதவி பொறியாளர் திரு. அய்யாசாமி அவர்களை நானும், எனது மாமா திரு. வெற்றிவேல் அவர்களும் நேரில் சந்தித்தோம். அப்போது அவர், தற்காலிக மின் இணைப்பு பெற விண்ணப்பப் படிவம், எனது தந்தையின் ஆதார் நகல், புகைப்படம், வீட்டுப் பத்திர நகல், கட்டிட அனுமதி நகல், VAO சான்று உள்ளிட்ட ஆவணங்களை ஒடிபன்னி கொண்டு வருமாறு தெரிவித்தார். அதன்படி தேவையான ஆவணங்களை தயார் செய்தேன். ஆனால் கட்டிட அனுமதி பெறுவதில் தாமதமாகிவிட்டது. அதன்பின்னர், 07.07.2026 அன்று காலை சுமார் 10.20 மணியளவில் மீண்டும் மஞ்சினி மின் வாரிய அலுவலகத்திற்குச் சென்று ஆவணங்களை வழங்க சென்றேன். ஆனால் உதவி பொறியாளர் திரு. அய்யாசாமி அவர்கள் அலுவலகத்தில் இல்லாததால், அங்கிருந்த ஊழியர்களிடம் இருந்து அவரது செல் நெம்பர் 9445852391-ஐ பெற்று, எனது செல் நெம்பர் 9791960396 மூலம் தொடர்பு

கொண்டேன். அப்போது அவர் மீட்டிங்கில் இருப்பதாகவும், பிறகு நான் வருமாறும் தெரிவித்தார். அதன்படி 08.07.2026 அன்று காலை சுமார் 9.40 மணியளவில் மீனாட்சி மின் அலுவலகத்திற்குச் சென்றேன். அன்றும் அவர் இல்லாததால், காலை 9.45 மணியளவில் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் மீட்டிங்கிற்கு சென்றுவிட்டதாக தெரிவித்து, மதியத்திற்கு பிறகு தொடர்பு கொள்ளுமாறு கூறினார். அன்றைய தினம் மதியம் சுமார் 3.05 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது அவரை மீண்டும் தொடர்பு கொண்டு தற்காலிக மின் இணைப்பு குறித்து கேட்டேன். அப்போது அவர் வீடு எங்கு கட்டப்படுகிறது என்று கேட்டார். அதற்கு நான் S N K மில் எதிரில் வீடு கட்டி வருவதாக தெரிவித்தேன். அதற்கு அவர், இடத்தை நேரில் பார்ப்பதாகவும், பின்னர் தன்னை தொடர்பு கொள்வதாகவும் தெரிவித்தார். பின்னர் 10.07.2026 அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் AE திரு. அய்யாசாமி அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து, எனது அப்பாவிடம் தற்காலிக மின் இணைப்பிற்கு தேவையான ஆவணங்களை பெற்றுக் கொண்டு, அலுவலகத்திற்கு வந்து சந்திக்குமாறு கூறிவிட்டு சென்றார். அந்த தகவலை எனது அப்பா என்னிடம் தெரிவித்தார். அதனால், அன்று மாலை சுமார் 4.55 மணியளவில் நான் அவரை போனில் தொடர்பு கொண்டபோது, தான் வளையபாளையாதேவி அரசு பள்ளி அருகில் இருப்பதாகவும், அங்கு வருமாறும் கூறினார். அதன்படி நான் அங்கு சென்று அவரைச் சந்தித்தேன். அப்போது, தற்காலிக மின் இணைப்பு வழங்குவதற்காக ரூ 15,000/- தனக்கு தனியாக தர வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், தாங்கள் கூறியபடி அனைத்து ஆவணங்களையும் தயாரித்து கொடுத்துள்ளேன். இதற்கு ஏன் ரூ 15,000/- தர வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர், இந்த வேலைக்கு நீங்கள் கொடுத்துதான் ஆக வேண்டும் என்று தெரிவித்து, பணம் இப்போதே கொடுங்கள் என்று தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் ரூ 4,000/- தான் உள்ளது என்று சொல்லி பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு, மீதி பணத்தில் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் ரூ 1,000/- குறைத்து, மீதமுள்ள ரூ 10,000/- ஐ லைன்மேன் திரு. சந்திரன் அவர்களிடம் கொடுக்குமாறும், அவரே ஆன்லைனில் பதிவு செய்து மின் இணைப்பை பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார். பின்னர் 15.07.2026 அன்று காலை சுமார் 9.45 மணியளவில் AE திரு. அய்யாசாமி அவர்களை போனில் தொடர்பு கொண்டு, ஆன்லைனில் பதிவு செய்யப்பட்டது, மின் இணைப்பு எப்போது கிடைக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர், பதிவு செய்ய கொடுத்திருப்பதாகவும், மதியம் வரும்போது

பார்க்கலாம் என தெரிவித்தார். அதன்பின்னர் அவரது தரப்பு மதியம் சுமார் 12.25 மணியளவிலும், 16.07.2026 அன்று பிற்பகல் 3.30 மணியளவிலும் அவரை மீண்டும் தொடர்பு கொண்டேன். இரு முறையும் அவர் வெளியே இருப்பதாகவும், பின்னர் அழைப்பதாகவும் கூறிவிட்டார். இந்நிலையில், 17.07.2026 அன்று மதியம் சுமார் 1.20 மணியளவில் லைன்மேன் திரு. சந்திரன் அவர்கள் என்னை அவரது போன் நெம்பர் 9043496186 ல் இருந்து தொடர்பு கொண்டு, உதவி பொறியாளர் திரு. அய்யாசாமி அவர்கள் ரூ 4,000/-ஐ என்னிடமிருந்து வாங்கிக்கொண்ட விபரத்தை தெரிவித்து, தற்போது 6,000/-ம் கொடுங்கள் என்று கேட்டார். அதன்படி, 18.07.2026 அன்று மதியம் சுமார் 12.55 மணியளவில் லைன்மேன் திரு. சந்திரன் அவர்கள் மீண்டும் என்னை தொடர்பு கொண்டு, பணத்தை எப்போது தருவீர்கள் என்று கேட்டார். அப்போது நான் வெளியூரில் இருப்பதாக தெரிவித்தேன். பின்னர் 21.07.2026 ந் தேதி காலை சுமார் 09.40 மணிக்கு மஞ்சினி மின் வாரிய அலுவலகத்திற்குச் சென்று உதவி பொறியாளர் திரு. அய்யாசாமி அவர்களை சந்தித்து, லைன்மேன் திரு. சந்திரன் அவர்கள் ரூ 6,000/-ம் கேட்ட தகவலை தெரிவித்தேன். அதற்கு அவர் லைன்மேன் திரு. சந்திரன் அவர்களை அழைத்து எதற்கு குறைச்சி சொல்லிகிட்டு இருக்க, யாருக்கெல்லாம் கொடுக்கனும் தெரியுமா என சொல்லிவிட்டு, என்னிடம் ரூபாய் 10,000/-ம் கொடுத்திடுங்க அப்போதுதான் வேலைய உடனே முடியும் என திட்டவட்டமாக சொல்லி அனுப்பிவட்டார். அவர் கேட்டவாறு பணம் ரூ 10,000/-ம் ரெடி செய்து வைத்திருக்கிறேன். ஆனால், உதவி பொறியாளர் திரு. அய்யாசாமி மற்றும் லைன்மேன் திரு. சந்திரன் ஆகியோருக்கு லஞ்சமாக பணம் ரூ 10,000/- கொடுத்து தற்காலிக மின் இணைப்பு பெற எனக்கு விருப்பமில்லை. எனவே, அவர்கள் இருவரும் மீதும் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்/- xxxxxx (B லாபேஷ்))

Sir, Received the above computer typed complaint on 21.07.2026 at about 13.00 Hrs. Sd xxxx (N.Narendran) 21/07/2026, Inspector of Police, V & AC, Salem

Sir, The genuineness of the informants was verified through reliable sources, and nothing adverse came to notice. The integrity and antecedents of both the accused persons were also verified through sources and were found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a

case in Salem V & AC Cr No 11/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 21.07.2026 at 17.30 hrs Sd xxxx (N Narendran) 21/07/2026, Inspector of Police, V & AC, Salem

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

N. Narendran 21.07.2026
(N.நரேந்திரன்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.